# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 15.07.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 133/SCIC/2024**

திருமதி.V.நீலிமா - மேல்முறையீட்டாளர்
கதவு எண்.2/3, சுதானந்த பாரதி தெரு
கணபதிபுரம்,
கிழக்கு தாம்பரம், சென்னை 600 059.
கைபேசி- 9444086665

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
செயற்பொறியாளர்.
மண்டலம்-9, நுங்கம்பாக்கம்
பெருநகர சென்னை மாநகராட்சி
எண்.1, லேக் ஏரியா, 4வது குறுக்கு தெரு
சென்னை-600 034.

## ஆணை

| | | |
|---|---|---|
| 1. | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **09.11.2022** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 27.12.2022 |
| 3 | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 06.07.2023 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 30.12.2023 |
| 5. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 30.01.2024 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 12.04.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 09/11/2022 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர் / செயற்பொறியாளர், சென்னை பெருமாநகராட்சி, பெரியமேடு, சென்னை-3 அவர்களுக்கு அனுப்பி, அதில் “பழைய கதவு எண்.151, Village Road (வள்ளுவர் கோட்டம் ஹைரோடு) Construction @

151, New No.312, Village Road (வள்ளுவர் கோட்டம் ஹைரோடு) என்ற வணிக வளாகத்திற்கு சென்னை பெருமாநகராட்சி கட்டிட அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அக்கட்டிடத்திற்கு அனுமதி அளித்த (Completion Certificate) நிறைவு சான்றிதழ் எத்தனை தளத்திற்கு தங்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கான வரைபடம், நாள், மாதம், வருடம் முழுமையான அனைத்து கோப்புக்களையும் தங்கள் துறை ரீதியான சான்றொப்பமிட்டு முழுமையாக விடுதல்களின்றி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.” என்பன போன்று 2 (இரண்டு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (15/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திருமதி.V.நீலிமா அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.D.அன்பழகன், உதவி பொறியாளர், மண்டலம்-9, டிவிஷன்-113, X-09. சென்னை பெரு மாநகராட்சி அவர்கள் உரிய அங்கீகார கடிதத்துடன் நேரில் ஆஜரானார். **பொதுத் தகவல் அலுவலர்/ செயற்பொறியாளர் Ms.வித்யா அவர்கள் ஆணையத்தின் விசாரணைக்கு ஆஜராக இயலாமைக்கு அளித்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ள காரணத்தினை ஆணையம் ஏற்கவில்லை. இனி வருங்காலங்களில், அவர் ஆணையத்தின் விசாரணைக்கு முன்னுரிமை அளித்து, ஆஜராக வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது. ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில் மனுதாரர் நிறைவு சான்றிதழ் (Completion Certificate) அளிக்கக் கோரியுள்ளார். அதற்கு 06/07/2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக 'பராமரிப்பில் இல்லை' என பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. மனுதாரர் கோரியுள்ள ஆவணம் பொதுவாக அலுவலகப் பராமரிப்பில் இருக்க வேண்டும். எனவே, ஆணையர், சென்னை பெருமாநகராட்சி அவர்கள் இதுகுறித்து உரிய கவனம் செலுத்தி சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், மேற்சொன்னவாறு, நிறைவு சான்றிதழ் பராமரிப்பில் இல்லையெனில், அதனை மீண்டும் உருவாக்கி, அதனை பராமரிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறது. ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 133/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

1.ஆணையாளர்
சென்னை பெருமாநகராட்சி,
சென்னை பெருமாநகராட்சி அலுவலகம்
ரிப்பன் மாளிகை, சென்னை-600 003.

2.பொதுத் தகவல் அலுவலர் /
செயற்பொறியாளர்.
மண்டலம்-9, நுங்கம்பாக்கம்
பெருநகர சென்னை மாநகராட்சி
எண்.1, லேக் ஏரியா, 4வது குறுக்கு தெரு
சென்னை-600 034.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திருமதி.V.நீலிமா
கதவு எண்.2/3, சுதானந்த பாரதி தெரு
கணபதிபுரம்,
கிழக்கு தாம்பரம், சென்னை 600 059.
கைபேசி- 9444086665

RG/Sr.PC